மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 5-5-2010, புதன்கிழமை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-2010) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. யாதொரு வணிகர், கோயம்புத்தூரிலுள்ள திருவாளர்கள் ஈஷா பவுண்டேஷனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்ததன்பேரில் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 2-2-2010 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 20-5-2009 ஆம் நாளிட்ட 405 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/ 1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].